# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

## க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை - 2018

### மூன்றாம் தவணைப்பரீட்சை

சுட்டெண் : ...........................

| புவியியல் I, II | 61 | T | I, II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|

**புவியியல் I**

- ❖ இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் உள்ளடக்கியுள்ளது.
- ❖ ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.

♦ **1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு அடைப்புக்குறியினுள் தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையினை தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

01. உயிர்க்கோளம் நிலைத்திருப்பதில் மிகமுக்கிய பங்காற்றும் வளிமண்டலப்படை ........................... ஆகும்.
(இடைமண்டலம் / மாறன் மண்டலம் / படை மண்டலம்)

02. வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட் வாயுவின் சதவீதம் .............................. ஆகும்.
(0.93% / 0.03% / 0.3%)

03. உலகின் மிகப்பெரிய ஏரியாக .............................. கருதப்படுகிறது.
(சுப்பீரியர் ஏரி / தித்திக்கா ஏரி / அயர் ஏரி)

04. ........................... கடல் இந்து சமுத்திரத்திரத்துடன் இணைப்பினைக் கொண்டுள்ளது.
(மத்தியதரைக்கடல் / அரேபியன் கடல் / தைமூர்கடல்)

05. இலங்கையில் கனிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ........................... எனும் இடத்தில் அமைந்துள்ளது.
(சபுகஸ்கந்த / ஒருவெல / களனி)

06. உலகில் காரிய உற்பத்தியில் 60% இனை கொண்டுள்ளநாடு .................................... ஆகும்.
(இலங்கை / இந்தியா / சீனா)

07. அடையற்பாறைக்கு உதாரணமாக ................................... பாறையைக் கூறலாம்.
(பசோல்ட் / தொலமைட்டு / சுண்ணக்கல்)

08. உலகில் மிகக் குறைந்தளவான சனத்தொகையைக் கொண்ட கண்டம் ............................ ஆகும்.
(ஆசியாகண்டம் / அவுஸ்திரேலியா கண்டம் / ஆபிரிக்கா கண்டம்)

09. இலங்கையில் முதன்முதலில் …………………..ஆம் ஆண்டில் சனத்தொகைக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

(1800 / 1890 / 1871)

10. முழு இலங்கைக்குமான வடிவகாலமைப்பு ………………………………. வடிகால் அமைப்பாகும்.

(மரநிகர்வடிகாலமைப்பு / அளியடைப்பு வடிகாலமைப்பு / ஆரைவடிகாலமைப்பு)

**11 – 15 வரையான வினாக்களுக்கு பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "ச" எழுத்தினையும் பிழையாயின் "பி" எழுத்தினையும் சுற்றி வட்டமிடுக.**

11. இலங்கையில் அதின சனத்தொகை கொண்ட மாவட்டம் கொழும்பு ஆகும். (ச/பி)

12. இலங்கையில் வரண்ட வலயத்தில் அதிகம் காணப்படும் மண் செங்கபிலமண் ஆகும் (ச/பி)

13. சமஉயரக்கோடுகள் நெருக்கமின்றி ஐதாக அமைந்திருக்கும் சாய்வு மென்சாய்வு (ச/பி)

14. மனித வறுமைச்சுட்டென் மரபுவழி அபிவிருத்தி குறிகாட்டி ஆகும் (ச/பி)

15. தேம்ஸ்நதி ஊற்றிலிருந்து உற்பத்தியாகிறது (ச/பி)

**16 – 20 வரையான வினாக்களுக்கு "அ" மற்றும் "ஆ" என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன அவற்றுக்கிடையிலான தொடர்புகளின் அடிப்படையில் பொருந்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதிகளின் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

16. வளிமண்டலத்தின் பிரதான படைகள் "அ" நிரலிலும் அப்படைகளின் விசேட அம்சங்கள் "ஆ" நிரலிலும் தரப்பட்டுள்ளன. "அ" நிரலில் உள்ளவற்றை "ஆ" நிரலுடன் தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடையினை தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. படை மண்டலம் | A. மின்னியக்கச் செயற்பாடு |
| 2. மாறன் மண்டலம் | B. ஓசோன் படை அமைவு |
| 3. இடை மண்டலம் | C. வானிலைத் தோற்றப்பாடுகள் |
| | D. துரித வெப்பநிலை உயர்வு |

1. BCD    2. CBA    3. BCA    4. BAC (……)

17. உலகின் தீவுகள் சில "அ" நிரலிலும் அவை அமைவு பெற்ற சமுத்திரங்கள் "ஆ" நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தினால் பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. ஜப்பான் | A. அந்திலாந்திக் சமுத்திரம் |
| 2. கியூபா | B. இந்த சமுத்திரம் |
| 3. சீசெல்ஸ் | C. பசுபிக்சமுத்திரம் |
| | D. ஆட்டிக்சமுத்திரம் |

1. CAB    2. CBD    3. DBC    4. BCA (………..)

18. உலகின் மில்லியன் சனத்தொகை கொண்ட நகரங்கள் சில “அ” நிரலினுள் அவை அமைந்துள்ள நாடுகள் “ஆ” நிரலிலும் தரப்பட்டுள்ளன. “அ” நிரலிலுள்ள “ஆ” நிரலுடன் தொடர்புபடுத்தினால் பெறப்படும் விடை

| அ | ஆ |
|---|---|
| 1. டோக்கியோ | A. நைஜீரியா |
| 2. பிஜிங் | B. யப்பான் |
| 3. நியூயோக் | C. அமெரிக்கா |
| | D. சீனா |

1. BDA 2. BCD 3. BDC 4. ADC (…………)

19. பாறைவகைகள் சில “அ” நிரலிலும் அவை பயன்படுத்தப்படுகின்ற முறைகள் “ஆ” நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தினால் பெறப்படும் சரியானவிடை

| அ | ஆ |
|---|---|
| 1. தொலமைட்டு | A. சீமெந்து உற்பத்தி |
| 2. பளிங்குபட்டைப்பாறை | B. உரஉற்பத்தி |
| 3. சுண்ணக்கல்பாறை | C. சிலைதயாரிப்பு |
| | D. பென்சில் கூர் |

1. BCA 2. ABC 3. DBC 4. BAC (……...)

20. உலகின் புவித்தகடுகள் சில “அ” நிரலிலும் அவற்றில் அமைவு பெற்ற நாடுகள் “ஆ” நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தினால் பெறப்படும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. பசுபிக்தகடு | A. கியூபா |
| 2. ஆபிரிக்கத்தகடு | B. யப்பான் |
| 3. இந்தோ அவுஸ்திரேலியதகடு | C. சுமாத்திரா |
| | D. கென்யா |

1. DBA 2. ADC 3. BDC 4. CDB (……...)

**21 – 25 வரையான வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**


21. இலங்கையில் அனல்மின் உற்பத்தி நிலையம் …………….. அமைவு பெற்றுள்ளது.

22. இலங்கையில் தென்மாகாணத்தில் அமைக்கப்பட்ட சர்வதேச விமானநிலையம் ……………… ஆகும்.

23. கூரைஓடுகள் உற்பத்திக்கு ……………………….. பயன்படுகின்றது.

24. ஒரு குறிப்பிட்ட விடயத்தினை மட்டும் முன்வைத்து வரையப்படும் தேசப்படம் ………………. எனப்படும்.

25. சமூக அபிவிருத்திமட்டத்தில் முதன்மை பெறும் தென்னாசிய நாடு ……………. ஆகும்.




**26 – 30 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தினைப் பயன்படுத்தி விடைதருக.**

26. இலங்கையின் சனத்தொகை அடர்த்தி குறைந்த மாவட்டத்தினை ………………….. எனும் எழுத்து குறித்துக் காட்டுகிறது.

27. இலங்கையின் நெல் ஆராய்ச்சி நிலையம் அமைவு பெற்ற மகாஇலுப்பலமாவை ………………… எனும் எழுத்து குறித்துக்காட்டுகின்றது.

28. இலங்கையின் கிழக்கு கரையில் அமைவுபெற்ற நிலாவெளி எனும் இடத்தினை ………………… எனும் எழுத்து குறிக்கின்றது.

29. காற்றுச்சக்தி மூலம் மின் உற்பத்தி இடம்பெறும் அலகு அமைந்துள்ள மாவட்டம் ………………… ஆகும்.

30. இலங்கையில் அதிகூடியளவு நெல்லுற்பத்தி இடம்பெறும் மாவட்டத்தினை குறிக்கும் எழுத்து ………………. ஆகும்.

**31 – 40 வரையான வினாக்களிற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அடைப்பினுள் விடைக்குரிய எண்ணை எழுதுக.**

31. கண்டங்களின் எல்லையிலிருந்து சமுத்திரங்களை நோக்கி பரந்துள்ள ஆழங்குறைந்த கடற்பரப்பு அழைக்கப்படும் விதம்
    1. கரையோடு 2. கண்டமேடை 3. தீவு 4. கண்டச்சாய்வு (……..)

32. கடகக்கோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடையில் பரந்துள்ள காடுகள் …………….. என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன.
    1. அயனவலயக்காடு 2. ஊசியிலைக் காடு
    3. இடைவெப்பகாடு 4. முட்புதர்க்காடு (………)

33. இலங்கையின் சிறுதென்னை முக்கோண வலயம் எனப்படும் பிரதேசங்கள் பின்வரும் எப்பிரதேசங்களை இணைக்கின்றது.
    1. கொழும்பு – சிலாபம் - குருனாகல் 2. ரன்ன – மித்தெனிய – தங்கல்ல
    3. சிலாபம் - புத்தளம் - குருனாகல் 4. மித்தெனிய – மத்தள – புத்தல (……….)

34. இலங்கையில் ரூற்றைஸ்க்கு பிரசித்து பெற்ற பிரதேசம்
    1. கந்தளாய் 2. நிலாவெளி 3. புல்மோட்டை 4. எம்பிலிபிட்டி

35. தாய்ப்பாறையின் தன்மை முழுமையாகச் சிதைவடைந்து காணப்படும் மண்படை
    1. C படை 2. B படை 3. A படை 4. O படை
    (……….)

36. இலங்கையில் அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கால் நெற்செய்கை பாதிப்பினை அடைந்த நெல்லுற்பத்திச் சுற்றாடல் வலயம்
    1. உலர்வலயம் 2. மலைபகுதி 3. இடைவலயம் 4. ஈரவலயம் (………)

37. இலங்கையின் முதலாவது பல்நோக்கு அபிவிருத்தித்திட்டத்துடன் தொடர்புடைய நதி
    1. மகாவலிகங்கை 2. கல்லோயாநதி 3. வளவை கங்கை 4. கலாஓயா (……….)

38. "அபிவிருத்தி" என்பதற்கு பொருத்தமான வரைவிலக்கணத்தை முன்வைத்த சர்வதேச நிறுவனம்
    1. ஐ.நா.சபை 2. யுனெஸ்கோ
    3. யுனிசெப் 4. சிறுவர் பாதுகாப்பு மையம் (……..)

39. இலங்கையின் ஆகக்கூடிய நீளம்
    1. 432km 2. 234km 3. 224km 4. 422km (……….)

40. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படத்தில் 20cm நீளமான வீதியின் உண்மையான நீளம்.
    1. 9km 2. 10km 3. 40km 4. 20km (……..)

(1x40=40 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

**க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை**

**மூன்றாம் தவணைப்பரீட்சை – 2018**

| | | | |
|---|---|---|---|
| **புவியியல்** I, II | **61** | T | I, II |

**புவியியல் II**

- இவ்வினாத்தாள் I, II என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது
- பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

**பகுதி – I**

01. **(அ)**

♦ **தரப்பட்ட இடவிளக்கப் படத்தின் உதவியுடன் பின்வரும் வினாக்களிற்கு விடையளிக்குக.**

i. தரப்பட்ட இடவிளக்கப்படத்தில் இலக்கம் 1 எனக் காட்டப்பட்ட அம்சம்
(சேனைப்பயிர்செய்கை / நெற்பயிர்ச்செய்கை / வீட்டுத்தோட்டம்)

ii. தரப்பட்ட இடவிளக்கப் படத்தில் இலக்கம் 2 இனால் குறித்து காட்டப்படும் அம்சம்
(இடவுயரம்/ காடுகள்/ புல்வெளிகள்)

iii. தரப்பட்ட இடவிளக்கப் படத்தில் இலக்கம் 3 எனக் குறித்துக் காட்டப்பட்ட அம்சம்
(அணைக்கட்டு/ ஜீப்வண்டிப்பாதை / சிறுவீதி)

iv. தரப்பட்ட படத்தில் இலக்கம் 4 இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சம்
(அகன்ற இரட்டைப்பாதை / ஒடுங்கியபாதை/ சுரங்கவழி)

v. தரப்பட்ட படத்தில் 5 இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள நிர்வாக அலகு
(மாவட்டடை எல்லை/ மாகாண எல்லை/ நகரசபை எல்லை)

♦ **பின்வரும் வினாக்களிற்கு சரியான விடையளிக்குக.**

vi. தரப்பட்ட இடவிளக்கப்படம் உள்ளடங்கும் மாகாணம் எது?

vii. இப் பிரதேசத்திற்கு நீர் வழங்கும் பிரதான மூலமாக அமைந்துள்ளது எது?

viii. இப் பிரதேசத்தின் சிறப்பம்சம் ஒன்று தருக?

ix. இப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பயிர்வகைகளைத் தருக?

x. இப் பிரதேசத்தில் விருத்தி செய்யக்கூடிய கைத்தொழில்துறை ஒன்றைத் தருக?


(10×1= 10 புள்ளிகள்)




(ஆ)

- **தரப்பட்ட உலகப்படத்தின் உதவியுடன் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**
    - i. A, B, C, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் இருந்து மரேடாலிங் நதியைக் குறிக்கும் எழுத்து
    - ii. D, E, F, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் இருந்து றொக்கி மலையைக் குறிக்கும் எழுத்து
    - iii. G, H, L, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் கஸ்பியன் கடலைக் குறிக்கும் எழுத்து.
    - iv. J, K, I, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் தற்போதைய உலக கால்பந்து விளையாட்டில் வெற்றியீட்டிய பிரான்ஸ் நாட்டைக் குறிக்கும் எழுத்து
    - v. M, N, O, எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் தைபூன் எனும் புயல்தாக்கம் செலுத்தும் பிரதேசத்தினை காட்டும் எழுத்து

(5×1= 5புள்ளிகள்)




♦ **தரப்பட்ட இலங்கைப் படத்தின் உதவியுடன் பின்வரும் வினாக்களிற்கு விடையளிக்குக.**

i. A, B, C எனத் தரப்பட்ட எழுத்துக்களில் உலகத்தரவரிசையில் இடம்பெற்ற முக்கிய சுற்றுலாத்தளமான பாசிகுடாவைக் குறிக்கும் எழுத்து


ii. படத்தில் K,L,M எனத்தரப்பட்ட எழுத்துக்களில் பிரதான மைக்ரோமோட்டார் வாகனப்பொருத்தும் தொழிற்சாலையான பொல்காவலையை குறிக்கும் எழுத்து

iii. படத்தில் X, y Z எனத்தரப்பட்ட எழுத்துக்களில் அம்பேவல பாற்பண்ணை அமைந்த நுவரெலியா மாவட்டத்தை குறிக்கும் எழுத்து

iv. படத்தில் P, Q, R எனத் தரப்பட்ட எழுத்துக்களில் தெய்வேந்திர முனையை காட்டும் எழுத்து எது?


v. படத்தில் E G F எனத்தரப்பட்ட எழுத்துக்களில் இலங்கையின் தேசியவன விலங்கு புகலிடமான வில்பத்து சரணாலத்தைச் சுட்டும் எழுத்து எது?

(5×1= 5புள்ளிகள்)




## பகுதி II

02. இங்கு தரப்பட்டிருக்கும் வரைபடம் புவியின் உள்ளமைப்பின் படைப்பகுதிகளை காட்டுகின்றது.




i. இந்தப்படத்தில் முறையே A மற்றும் B யின் மூலம் குறித்துக்காட்டப்படும் படையினைப் பெயரிடுக.

A. ………………………….

B. ……………………………….

(2 புள்ளிகள்)

ii. C படையின் முக்கிய அம்சங்களைத் தருக

(3 புள்ளிகள்)

iii.a.புவி கவசத்தகடுகள் அசைவதனால் ஏற்படும் விளைவுகளை குறிப்பிடுக?

(2 புள்ளிகள்)

b. அவ்விளைவில் ஏதாவது ஒன்றினை விளக்குக.

(3 புள்ளிகள்)

03. i. சனத்தொகை அடர்த்தி என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(2 புள்ளிகள்)

ii. உலகில் சனத்தொகை அடர்த்தி அதிகமாக பரம்பியுள்ள பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிடுக

(3 புள்ளிகள்)

iii. இலங்கையில் மாவட்டரீதியான சனத்தொகைப் பரம்பலில் வேறுபாடுகள் காணப்படுகின்றமைக்கான காரணிகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக

(5 புள்ளிகள்)

04. i. நவீன அபிவிருத்திக் குறிகாட்டிகள் இரண்டினைக் குறிப்பிடுக

(2 புள்ளிகள்)

ii. இலங்கையில் கல்வித்துறை சார்ந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மூன்று தருக

(3 புள்ளிகள்)

iii. கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவாக்குவதன் மூலம் நம்நாடு அடையக்கூடிய நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

05.




i. தரப்பட்ட படத்தில் ஆசியாவிற்கு வெளியே நெற்பயிர்ச்செய்கை இடம்பெறும் பிரதேசங்களான சக்ரமன்பள்ளத்தாக்கு, நைல்நதிகழிமுகம் ஆகியவற்றைக் குறிப்பிடும் எழுத்துக்களை முறையே தருக.

(2 புள்ளிகள்)

ii. கோதுமைப் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் மூன்றினைக் குறிப்பிடுக?

( புள்ளிகள்)

iii. உலகப்பாற்பண்ணை உற்பத்தியில் ஈடுபடுகின்ற நாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு பாற்பண்ணையின் விசேட பண்புகளைக் குறிப்பிடுக

(5 புள்ளிகள்)

06. i. இலங்கையில் சிறு ஏற்றுமதி பயிர்கள் பயிரிடப்படுகின்ற மாவட்டங்கள் A, B, C, D என தரப்பட்டுள்ளன. அம் மாவட்டங்களை எழுதுக?

(2 புள்ளி)

ii. சிறு ஏற்றுமதியில் பயிரிடப்படும் பயிர்கள் எவை?


(3 புள்ளி)

iii. a. இலங்கை அரசு 1960 இற்குப் பின்னர் சிறு ஏற்றுமதிப்பயிர்கள் விருத்தியில் கவனம் செலுத்துவதற்கான காரணிகள் இரண்டினைத் தருக.

(2 புள்ளிகள்)

b. சிறு ஏற்றுமதி பயிர்களைப் பயிரிடுவதனால் ஏற்படும் இரண்டு நன்மைகளை விளக்குக.

(5 புள்ளிகள்)



07.i. இலங்கையில் பின்வரும் கைத்தொழில்களுக்கு பிரபல்யமான இடங்களினை தருக.

பித்தளை அலங்காரப் பொருட்கள்

தளபாடப் பொருட்கள்

முகமூடி

பிரம்பு வேலைகள்

(2 புள்ளிகள்)

ii. குடிசைக் கைத்தொழில் உற்பத்திகள் சிலவற்றைத் தருக.

(3 புள்ளிகள்)

iii.a.குடிசைக்கைத்தொழிலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை தருக.

b.குடிசைக் கைத்தொழில் அபிவிருத்திக்காக அண்மைய காலத்தில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்று தருக.

(3 புள்ளிகள்)

08.i.மண் உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்தும் இரண்டு காரணிகளை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

ii.இலங்கையின் உலர்வலயத்தில் காணப்படும் இரு வகையான மண்வகைகளைத் தருக. ஏதாவது ஒன்றினை விளக்குக.

(3 புள்ளிகள்)

iii.மட்பாதுகாப்பு நடவடிக்கைகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

09.i. இயற்கை இடர் என்பதனால் கருதப்படுவது யாது.

(2 புள்ளிகள்)

ii. இலங்கைக்கு அதிகம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

a. புவிச்சரிதவியல் ரீதியான இடர்கள் இரண்டினையும்

b. காலநிலையியல் ரீதியான இடர் ஒன்றினையும் பெயரிடுக.

(3 புள்ளிகள்)

iii.இயற்கை அனர்த்தங்களின் தாக்கம் தீவிரமடைவதில், மனித நடவடிக்கைகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(5 புள்ளிகள்)